


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.8.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அணில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா. சம்பத், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர் ஹனீஷ் சாப்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மணிப்பூரில் 9 முதல் 12 வரையிலான வகுப்புகள் தொடக்கம்

*இம்பால், ஆக. 11 - மணிப்பூரில் கடந்த மே மாதம் 3ந்தேதி இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. வன்முறை சம்பவங்களுக்கு 150க்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அம்மாநிலத்தில் வன்முறைகள் தொடர்ந்து நீடித்ததால் பள்ளி, கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. பின்னர் படிப்படியாக இயல்பு நிலை திரும்பி வருவதையொட்டி கடந்த மாதம் 1ம் வகுப்பு முதல் 8ம் வரை பள்ளிகள் திறக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புகள் வரை நேற்று தொடங்கப்பட்டது.*

## தமிழினத் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளை " முரசொலி" ஏடு 82 ஆம் ஆண்டில் (10.08.1942) தடம் பதிப்பதற்கு வாழ்த்துகள்!

*தில்லை சிதம்பரத்தில்*
*நடந்த வருணாசிரம*
*மாநாட்டைக் கண்டித்து*
*1944 ஆம் ஆண்டு அக்டோபர்*
*5 ஆம் நாள் முரசொலி துண்டு*
*அறிக்கை கலைஞர் அவர்கள்,*
*" சேரன் "என்ற புனைப் பெயரில்*
*வருணமா ? மானமா ?*
*என்ற தலைப்பில்*
*வெளியிடப்பட்டது.*

*அந்த துண்டறிக்கையில்*
*வரும் பாடல் வரிகள்...*
*"வருணமா ? மானமா ? "*

*பரணி பல பாடிப் பாங்குடன்*
*வாழ்ந்த*
*பைந்தமிழ் நாட்டில்*
*சொரணை சிறிதுமிலாச்*
*சுயநலத்துச்*
*சோதரர்கள் சிலர் கூடி*
*வருணத்தை நிலைநாட்ட*
*வகையின்றிக்*
*கருணங்கள் போட்டாலும்*
*மரணத்தின் உச்சியிலும்*
*மானம் காக்க*
*மரத் தமிழா ! போராடு !!*

*வருணாசிரமம் வீழ்க !*

*....இப்படித் தமிழினத் தலைவரால் தொடங்கப் பட்ட, " இன்றைய செய்தி*
*நாளைய வரலாறு " என்று*
*காலம் மெய்ப்பித்துக்*
*கொண்டிருக்கும்*
*முரசொலி ஏடு*

*இன்று 82 ஆம் ஆண்டில்*
*தடம் பதிப்பது கண்டு*
*பேருவகை கொள்கிறோம்.*

*" காரிருள் அகத்தில் நல்ல*
*கதிரொளி நீ தான்; இந்தப்*
*பாரிடைத் துயிலவோர்*
*கண்ணின்*
*பாய்ந்தோடும் எழுச்சி*
*நீ தான் !*
*ஊரினை நாட்ட இந்த*
*உலகினை ஒன்று சேர்க்கப்*
*பேரறிவாளர் நெஞ்சிற்*
*பிறந்த பத்திரிகைப்*
*பெண்ணே !*

*அறிஞர்தம் இதய ஓடை*
*ஆளநீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் எண்ணம்*
*செழித்திட ஊற்றி ஊற்றிக்*
*குறுகிய செயல்கள்*
*தீர்த்துக்*
*குவலயம் ஓங்கச்*
*செய்வாய் !*
*நறுமணம் இதழ் பெண்ண!*

*என்ற புரட்சிக்கவிஞரின் பாடல் வரிகளுக்கு இலக்கியமாக திகழும்*

*" முரசொலி நாளிதழ்"*
*நூறாண்டு ஆயிரம் ஆண்டு*
*வளர்க ! வளர்க !!*
*வாழ்க ! வாழ்க !!*

**கேவிஆர்**
*அய்யன் திருவள்ளுவர்*
*இலக்கிய மன்றம், மதுரை.*

## கனிமொழி கருணாநிதி உரை...

3ஆம் பக்கத் தொடர்ச்சி

உண்மை என்ன வெனில் குக்கி, நாகா, மெய்தீ என எந்த இன மக்களாக இருந்தாலும் அவர்களின் கண்களில் விரக்தியும் வேதனையும்தான் தெரிகிறது.

நான் இந்த அரசிடமும் பிரதமரிடமும் வேண்டுவதெல்லாம், அந்த மக்களிடம் செல்லுங்கள், பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்று சொல்லுங்கள். இதைக் கூட உங்களால் செய்ய முடியாதா? அவர்கள் ரத்தம் வழிய வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசு உங்களோடு நிற்கிறதோ இல்லையோ நாங்கள், இந்தியா கூட்டணி உங்களோடு இருக்கிறோம் என்று அம்மக்களுக்கு அங்கு சென்ற நாங்கள் உறுதியளித்துள்ளோம்.

மணிப்பூர் முதல்வர் குக்கி இன மக்கள் போதைப் பயிர்களை சாகுபடி செய்வதாக குற்றம் சாட்டுகிறார். ஆனால் முன்னாள் எஸ்பி பிருந்தா இதை மறுத்து முதல்வர் அலுவலகம் மீது குற்றம் சாட்டுகிறார். திசை திருப்பும் கதைகள் நிறைய செய்தித்தாள்களில் அங்கே வெளிவந்திருக்கின்றன.

அம்மாநிலத்திற்கு அனுப்பி வைக்கப்படும் உரங்கள் உணவுப் பயிர்க்கு பயன்படுத்தப்படாமல் வேறு எங்கோ சென்றுள்ளன. இதுகுறித்து முறையாக விசாரிக்கக் கூடாதா?

நீங்கள் புதிய நாடாளுமன்றத்திற்கு செங்கோலைக் கொண்டு வந்து வைத்துள்ளீர்கள். சோழர்களின் செங்கோல் என்றும் சொல்லிக் கொள்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றை முறையாக அறியவில்லை. சாமானியர்களின் கோபத்தால் சரிந்த பாண்டியன் செங்கோல் பற்றி அறிவீர்களா? கண்ணகியின் கோபம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? இந்தி திணிப்பதை விட்டுவிட்டு சிலப்பதிகாரத்தை ஒழுங்காக படியுங்கள். அது பல பாடங்களை உங்களுக்குக் கற்றுத் தரும்.

**எந்தப் பொறுப்பும் இல்லாத அரசு!**

ஒரு முக்கிய பிரச்சினை பற்றி எரியும்போதே அடுத்த இன்னொரு முக்கிய பிரச்சினை வந்து இந்த அரசை காப்பாற்றி விடுகிறது. ஒடிசாவில் மூன்று ரயில்கள் மோதிக் கொண்டு 288 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். அந்த விபத்தில் உயிரிழந்த சிலரின் உடல்கள் இன்னும் புவனேஸ்வரில் அடையாளம் காணப்படாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விபத்துக்குப் பின் நடந்த விசாரணையில் சிக்னல், தகவல் தொடர்பு துறையில் பணியாளர்கள் பற்றாக்குறை இருப்பது தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக இரு மாதங்களுக்கு முன்பாகவே அரசுக்கு எச்சரிக்கை விடப்பட்டதாகவும் தெரிகிறது. ஆனால் இத்தனை பெரிய விபத்து ஏற்பட்ட பின்னரும் ரயில்வேயில் பாதுகாப்பு தொடர்பான பணியாளர்கள் பற்றாக்குறை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் இருக் கிறது. அந்த விபத்தில் இருந்து அரசு என்ன பொறுப்பை கற்றுக் கொண்டிருக்கிறது? விபத்தில் உயிரிழந்தவர்கள் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. புள்ளி விவரங்களை மறைக்கிறது. வெளியிட மறுக்கிறது. பொறுப்பற்ற அரசாக இருக்கிறது.

**பொய் பேசும் ஸ்மிருதி இரானி!**

அமைச்சர் ஸ்மிருதி இரானி சொல்கிறார், இந்தியா 100 சதவிகிதம் திறந்த வெளி மலம்கழித்தல் இல்லாத நாடாக இருக்கிறது என்று சொல்கிறார். ஆனால் இந்தியாவில் ஒரே ஒரு மாநிலம் கூட அந்த இலக்கை அடையவில்லை. கூசாமல் பொய் சொல்கிறார் ஸ்மிருதி இரானி. வேலைவாய்ப்பு தொடர்பான புள்ளி விவரங்கள் தேர்தல் முடிவுகள் வந்ததில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கமிஷனில் இருந்து இருவர் ராஜினாமா செய்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

வேலைவாய்ப்பின்மை 8.5 சதவிகிதமாக அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. முதலீடுகள் பாதியாகக் குறைந்துள்ளன. முறையான வேலை வாய்ப்பு இல்லாததால் மக்கள் விவசாயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறார்கள். எந்த வளரும் நாட்டிலும் இது நடக்காது. தேசியக் கொள்கை காரணமாக ஆயிரமாயிரம் பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, லட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் கல்வியை இழந்து வருகிறார்கள். அரசுப் பள்ளிகளை நாடும் ஓபிசி, எஸ்.சி.எஸ்,.டி. மாணவர்கள்தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். (குறுக்கீடு)

இதையெல்லாம் கேட்டால் இ.டி.யை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டுகி றீர்கள். எதிர்க்கட்சிகளை மட்டுமின்றி ஊடகங்களையும் நீங்கள் மிரட்டுகிறீர்கள். மாற்றுத் திறனாளிகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஊதியம் மாதம் 300 ரூபாய். உங்கள் அரசாங்கத்தில் விற்கும் ஒரு கிலோ தக்காளிதான் இந்த பணத்துக்கு வாங்க முடியும். இதுமட்டுமல்ல இந்த ஆட்சியில் பெண்களுக்கு எதிராக 26.3 சதவிகித குற்றச்சாட்டு உள்ளது.

மாநிலங்களவையில் ஒரு கேள்விக்கு இணை அமைச்சர் பதிலளிக்கையில் 25593 எஸ்.சி., எஸ்.டி. மாணவர்களின் மத்திய பல்கலைகழகத்தில் இருந்து நின்றுள்ளதாக கூறினார். இந்த லட்சணத்தில் உங்களை பாரதம் என்று பெருமையாக சொல்லிக் கொள்கிறீர்கள்.

உங்களை நீங்கள் தேசியவாதிகள் என்று அழைத்துக் கொள்கிறீர்கள். எங்களை தேசத்துக்கு எதிரானவர்கள் என்று கூறுகிறீர்கள். ஆனால் உண்மை என்னவெனில் மக்களை நீங்கள் மதிப்பதே இல்லை. மணிப்பூர் மக்கள் மீது, பெண்கள் மீது, குழந்தைகள் மீது உங்களுக்கு என்ன அக்கறை இருக்கிறது? தேசத்தின் அனைத்து மக்களையும் ஒன்றாக மதிக்கத் தெரியாத நீங்கள் தேசியவாதிகளா? இந்தியத் தாயை ஒவ்வொரு நாளும் ரணப்படுத்திக் கொண்டே இருக்கிறீர்கள். இந்தியா உங்களுக்கு பாடம் கற்றுத் தரும்".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி உரையாற்றினார்.

## தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி பிரச்சாரக்குழு - சமூக வலைதள குழு - ஆலோசனைக் குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### ஜெ.ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி அறிக்கை!

தி.மு.க . மகளிரணி, மகளிர் தொண்டரணி, பிரச்சாரக்குழு,சமூக வலைதள குழு மற்றும் ஆலோசனைக்குழு மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (12/08/2023 சனிக்கிழமை) மாலை 4 மணி அளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் கழகத் துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மகளிரணி தலைவர் விஜயா தாயன்பன் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில மகளிரணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: 1. தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, 2. கழக ஆக்கப்பணிகள்.

**ஜெ.ஹெலன் டேவிட்சன்**
செயலாளர்
தி.மு.க. மகளிரணி

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டரணி

### மவுனம் கலையுமா?

## 'மவுன பிரதமர் மோடி' மணிப்பூரை இரண்டாக உடைத்தெறிந்தார்!

### 'தினகரன்' தலையங்கத்தில் வேதனை!

சென்னை, ஆக. 11 - "தினகரன்" நாளேடு தனது தலையங்கத்தில் பிரதமரின் மவுனம் கலையுமா? என்றும் 'மவுன பிரதமர் மோடி' மணிப்பூரை இரண்டாக உடைத்தெறிந்து விட்டார் எனவும் குற்றம் சாட்டியுள்ளது.


தினகரன்
மவுனம் கலையுமா?

அது வருமாறு:

மணிப்பூரில் மே 3ம் தேதி இரு பிரிவினரிடையே கலவரம் தொடங்கியது. கிட்டத்தட்ட 100 நாட்கள் ஆகியும் இதுவரை அங்கு நிலைமை கட்டுக்குள் வரவில்லை. அம்மாநிலத்தில் நடந்த வன்முறை சம்பவங்களில் இதுவரை 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பெண்கள் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த இந்தியாவையும் உலுக்கியது. இதுவரை 6,500க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், இந்த விவகாரத்தில் மாநில மற்றும் ஒன்றிய பா.ஜ. அரசுகளின் மந்தமான செயல்பாடுகளால் எதிர்க்கட்சிகள், பொதுமக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர். குறிப்பாக, இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி 'மவுன பிரதமர்' போல காட்சியளிப்பதாக விமர்சித்துள்ளனர்.

மணிப்பூரில் சட்டம், ஒழுங்கு முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பெண்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தப்படுவதாகவும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். மணிப்பூர் கலவரம் தொடர்பாக விசாரணை நடத்த 3 பேர் கொண்ட பெண் நீதிபதிகள் குழுவையும் நியமித்துள்ளனர். தொடர் எதிர்ப்பு எதிரொலியாக 80 நாட்களுக்கு பின் 30 வினாடிகள் பேசினார் பிரதமர் மோடி. ஆனால், மணிப்பூர் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி விளக்கம் அளிக்க வேண்டுமென மழைக்கால கூட்டத்தொடரி லேயே எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. 'வழக்கம்போல' எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை பிரதமர் மோடி நிராகரித்தார். இதையடுத்து எதிர்க்கட்சிகள் தரப்பில் நம்பிக்கை யில்லா தீர்மானம் ஒன்றிய அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்டது.

தீர்மானத்தின் மீதான 2 நாள் விவாதம் நாடாளுமன்றத்தில் பற்றி எரிகிறது. விவாதத்தை நேற்று முன்தினம் துவங்கி வைத்து காங்கிரஸ் எம்.பி. கவுரவ் கோகாய் பேசும்போது, மணிப்பூர் விவகாரத்தில் கலவரத்தை ஒடுக்க மாநில பா.ஜ. அரசு தவறி விட்டது. நடந்த தவறுகளை ஏற்காமல் பிரதமர் மோடி மவுனம் காக்கிறார். அதனால்தான் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர வேண்டிய சூழல் ஏற்பட்டதாக தெரிவித்தார். காங்கிரசை தொடர்ந்து தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் விவாதத்தில் பங்கேற்று, ஒன்றிய அரசுக்கு எதிரான தங்களது வாதங்களை முன் வைத்தன.

வன்முறை சம்பவங்களுக்கு பொறுப்பேற்று மணிப்பூரில் மாநில பா.ஜ. அரசு பதவி விலக வேண்டும். அங்கு ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டுமென கோரிக்கை எழுப்பப்பட்டன. இரண்டாவது நாளாக நேற்றும் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது தொடர்ந்த விவாதத்தில் ராகுல் காந்தி பேசுகையில், "கலவரம் நடந்த மணிப்பூருக்கு நான் சென்றேன். ஆனால், மோடி போகவில்லை. அம்மாநிலத்தை மோடி இரண்டாக உடைத்து விட்டார். மணிப்பூரை நாட்டின் ஒரு பகுதியாக மோடி கருதவில்லை" என குற்றம் சாட்டி பேசினார். கடந்த 2 நாட்களாக நடந்த விவாதத்தின்போது ஒன்றிய பா.ஜ. அரசு எம்பிக்கள், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் என இரு தரப்பிலும் நடந்த விவாதங்களில் அனல் பறந்தது.

இந்த விவாதங்களுக்கு இன்று பிரதமர் மோடி பதில் அளிக்க உள்ளார். இந்த விவகாரத்தை பொறுத்தவரை பிரதமரின் பதிலுரை, எதிர்க்கட்சியினரை குறை சொல்வதாக இருக்குமே தவிர, மணிப்பூர் பிரச்சினையை முன்னிறுத்தி இருக்காது என எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றன. மணிப்பூர் பிரச்சினை மட்டுமல்ல... இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களின் பிரச்சினை களுக்கும், பிரதமர் என்ற முறையில் மோடி உரிய பதிலளிக்க வேண்டும். பாரபட்சமின்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே ஒவ்வொரு குடிமகனின் விருப்பமாகும்.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் சாடியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஞா. மணிமாறன்

### ஆகஸ்ட் 11 (1984)



**மாணவ பருவம் தொட்டு கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு 1958ல் கழக உறுப்பினராகி, 1966ல் தனது ஆசிரியர் பணியிலிருந்து விலகி முழுநேர கழகப் பணியாற்ற தொடங்கினார்.**

**1969ல் 'கலைஞர் மன்றம்' என்ற அமைப்பை துவக்கி, அதன் செயலாளராகவும் பின்னர் 1971ல் சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளராகவும், 1977 முதல் 1984 வரை வாசுதேவநல்லூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**'வரதராஜன் கலைக்குழு' எனும் கலைக்குழுவை துவக்கி அதன் மூலம் கழகத்தின் கொள்கைகளை பட்டிதொட்டியெங்கும் பரவிடச் செய்தார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

### பிரதமரின் முதலைக் கண்ணீர்!

## பிரிவினை வாத மோடியால் வரலாற்று அவமானம்!

*சென்னை, ஆக. 11- பிரதமரை அவைக்கு வரவைப்பதற்கே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவேண்டியிருந்தது ஒரு வரலாற்றுஅவமானமே என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சித்தது. மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து,மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஏ.எம்.ஆரிப் செவ்வாயன்று மக்களவையில் ஆற்றிய உரை வருமாறு: வரலாற்றில் முதல்முறையாக இந்தியப் பிரதமரை நாடாளுமன்றத்துக்கு வரவழைப்பதற்காக, எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம்கொண்டுவந்தது.ஆளுங்கட்சிமுழுமையாகதோல்வியடைந்து விட்டதையே காட்டுகிறது. இந்திய வரலாற்றில் இதுவரை கண்டிராதவகையில்,ஒன்றியஅரசு மற்றும் மணிப்பூர் மாநில அரசுகளை நிராகரித்து, உச்சநீதிமன்றமேமணிப்பூர்நிர்வாகத்தைகையில் எடுத்துள்ளது. இதற்காக, பிரதமர் நரேந்திரமோடிமற்றும்உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும். பிரதமர் அவைக்கு வரவேண்டும் என வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்ட போது, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் 50 பேரை, அவையை ஒட்டியிருந்ததனதுஅறையில்கூட்டி, நாட்டைப் பிளவுபடுத்தும் தேர்தலில் எப்படி வெற்றி பெறுவது என்று ஆலோசனை நடத்துபவராக பிரதமர் மோடி இருக்கிறார்.*

**பிரிவினை வாத தலைவர்!**

*அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான 'டைம்' இந்தியபிரதமரைபிரிவினையின் தலைவர் என வர்ணித்துள்ளது. ரோமானியப் பேரரசு வீழ்ந்தபோதுபிடில்வாசித்த நீரோ சக்கரவர்த்தியுடன் இந்தியப் பிரதமரை நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும்பலஊடகங்கள்ஒப்பிட்டுள்ளன. மணிப்பூர் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்துக்கு வெளியே பிரதமர் பேசியதை 'முதலைக் கண்ணீர்' என டெலிகிராப் நாளிதழ் குறிப்பிட்டது. அதனாலேயேபத்திரிகையாளர்களைப் பார்த்து பயந்தும், கோபமடைந்தும் அவர்களை நாடாளுமன்றத்திற்குள் அனுமதிக்கவில்லை. இந்த அரசு மக்கள் மீது ஒற்றை சிவில் சட்டத்தை திணிக்க முயல்கிறது. குடியுரிமை சட்டத்திருத்த மசோதா போல், பாபர்மசூதியை இடித்தது போல், தற்போது,இந்தியதொல்லியல் துறையுடன், ஞானவாபி மசூதியையும் இடிக்க ஒன்றிய அரசு முயற்சிக்கிறது. மதுரா விலும் மசூதிகளை இடிக்கமுயற்சிப்பதாகபேச்சுவார்த்தையில்குறிப்பிடப்பட்டுள்ளது. வாக்குகளுக்காக நாட்டை எரிப்பதில் இவர்களுக்கு எந்த தயக்கமும் இல்லை.*

*ஈ.டி.(EnforcementDirectorate ED) எனப்படும் அமலாக்க இயக்குநர கம், 'எலெக்சன் டியூட்டி' (Election Duty) என பெயர் மாற்றப்பட்டு உள்ளது. வரவிருக்கும்2024தேர்தலை எதிர்கொள்ள ஈ.டி. (ED) தனது பணியை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. சஞ்சய் குமார் மிஸ்ராவை அமலாக்கத்துறை இயக்குநராக வாழ்நாள் முழுவதும் வைத்திருந்தாலும், எதிர்க்கட்சிகள் பா.ஜ.க.வை வலுவாக எதிர்கொள்ளும். பினராயி விஜயன் தலைமையிலான, கேரள இடது ஜனநாயக முன்னணி (எல்.டி.எப்.) அரசைக் கவிழ்க்க கடந்த தேர்தலின் போது, ஒன்றிய அரசு 9 மத்திய அமைப்பு களை கேரளத்திற்குஅனுப்பியது. ஆயினும் கூட, இதுபோன்றஉண்மையல்லாத முயற்சிகள் மக்களின் தீர்ப்பை பாதிக்காது என்பதும் கேரளத்தில் நிரூபிக்கப்பட்டது. இப்போது 'இந்தியா' என்ற பெயரைக் கேட்டாலேசகிக்கமுடியாதவராக பிரதமர்மாறியிருக்கிறார். முன்பு, 'மேக் இன் இந்தியா, 'ஸ்டார்ட் அப் இந்தியா' என்றவர், தற்போதுபதிலாக'கிழக்கிந்திய கம்பெனி', 'பாப்புலர் ப்ரண்ட்ஆப்இந்தியா'என்று கூறுகிறார். "Quit India" என்பது பிரதமரின்புதிய முழக்கமாகஉள்ளது. ஆனால், இந்த 'வெள்ளையனே வெளியேறு' முழக்கத்தின் மூலம், நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள்,ஆங்கிலேயர்களை இந்தியாவைவிட்டுவிரட்டியடித்ததையும், அப்போது, ஆர்எஸ் எஸ் தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்துக்கு எதிராக இருந்தார்கள் என்பதையும் பிரதமர் புரிந்துகொள்ளவில்லை. எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை, தனக்குள்ள பெரும்பான்மை பலத்தின்மூலம்பா.ஜ.க.அரசால் தோற்கடிக்க முடியும். ஆனால், இந்திய மக்களின் பலத்தால், வரும் காலத்தில் உண்மை யான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படும்.*

**நன்றி : 'தீக்கதிர்'**
**10.8.2023**